**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**பல்கலைக்கழக அனுமதி 2017 / 2018**

# மொழிபெயர்ப்புக் கற்கைநெறியில் சிறப்புக் கலைமாணிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான உளச்சார்புப் பரீட்சை – (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து **16.02.2018** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2017 / 2018 கைந்நூல் பக்கம் 89, பகுதி 2.2.8.28 ற்கு அமைய முன்று சித்திகள் (S) பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, அல்லது விஞ்ஞானப்பிரிவு, என எப்பிரிவைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

## உளச்சார்புப் பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழித் திறமை அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

## விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா **300/=** ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பதன் கணக்கு இலக்கம் **1621 0016 0000 880** இல் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2017 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.** பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **16.02.2018** ஆம் திகதிக்கு முன்னதாக **சிரேஸ்ட உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** எனும்

முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **மொழிபெயர்ப்புக் கற்கைநெறியில் சிறப்புக் கலைமாணிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான உளச்சார்புப் பரீட்சை** எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டுச் சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப்பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**உளச்சார்புப் பரீட்சை 07.04.2018** அன்று **யாழ்ப்பாணம்** மற்றும் **மட்டக்களப்பில்** நடைபெறும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் **021 222 6714.**

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
23.01.2018